சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L**

சார்பு நீதிபதி, அரூர்

2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.நி.ம.எண்.05/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.49/2014**

தனம் .... மனுதாரர்/8 ம் பிரதிவாதி

In

இந்திராணி .... எதிர்மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. சின்னம்மாள்
2. பார்வதி
3. ஜெயக்கொடி .... பிரதிவாதிகள்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 18.11.2025 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.அண்ணாதுரை,பி.காம்.,எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.கணேசன்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.காந்தி,பி.காம்.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகி இந்த மனுவை அனுமதிப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று மேல்எழுத்து செய்துள்ளார். இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மனுதாரர்/8 ம் பிரதிவாதி தரப்பில் சாட்சி விசாரணைக்காக இந்த வழக்கை Re-Open செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/8 ம் பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/8 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்: -**



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.12.19 17:12:48 +0530

(i) தான் மேற்படி வழக்கில் 8-ம் பிரதிவாதி ஆவேன் என்றும், மேற்படி வழக்கில் சாட்சி விசாரணைகள் முடிக்கப்பட்டு Argument-க்காக வழக்கு 23.09.2025 தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தற்போது வாதிக்கு எதிராக பல முக்கிய தகவல்களும் சாட்சியமும் கிடைத்து இருக்கிறது என்றும், அவைகளை வாதியை குறுக்கு விசாரணை செய்தால் தான் உண்மை சங்கதிகள் வெளிப்படும் என்றும், நீதி நிலைநாட்டப்படும். ஆகையால் PW-1 இந்திராணியை குறுக்கு விசாரணை செய்ய இத்துடன் Re-Call மனு தாக்கல் செய்ய உள்ளேன் என்றும், ஆகையால் கனம் கோர்ட்டார் அவர்கள் தயவுசெய்து சாட்சி விசாரணைக்காக இந்த வழக்கை Re-Open செய்து தக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகும், இல்லாவிட்டால் தனக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பும் பெருத்த கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்று மனுதாரர்/8ம் பிரதிவாதி மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின்சுருக்கம்</u>**: -

(i) மனு பொய்யானதும், தவறானதும், உண்மைக்கும் மாறானதும், சட்டப்படியும், நியாயபடியும் செல்லகூடியது அல்ல. மனு முதல் நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். மனு சங்கதிகளில் இந்த ஒப்புக்கொள்பவைகளை தவிர மற்றவைகள் எதிர்மனுதாரர் குறிப்பாக யாவும் பொய்யானதும், தவறானதும், உண்மைக்கு மாறானதும் ஆகும். அவைகளை மனுதாரரே மெய்ப்பிக்க வேண்டியதாகும்.

(ii) வாதி இந்திராணியை குறுக்கு வசிாரணை செய்த காலத்தில் பல முக்கிய தகவல்களும் வழக்கிற்கு இன்றியமையாத சாட்சியங்களும் விடுப்பட்டுள்ளது என்பதும், அவரை குறுக்கு விசாரணை செய்தால் தான் பல அவசிமான உண்மைகள் வெளிப்பட வாய்ப்பு உள்ளது என்பதும், அதற்க்காக வேண்டி வாதி தரப்பு 1-ம் சாட்சியை Re - Call செய்ய வேண்டுமென்பதும், அவரை விசாரணை செய்ய வழக்கை Re-Open செய்ய வேண்டுமென்பதும், தவறானதும், பொய்யானதும், உண்மைக்கு மாறானதுமாகும்.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.19 17:12:51 +0530

(iii) வாதி தரப்பு 1-வது சாட்சியின் குறுக்கு விசாரணை நீண்ட பிறகு 03.09.2024-ம் தேதி குறுக்கு விசாரணை வாய்தாக்களுக்கு முடிக்கப்பட்டது. அதன் பிறகு வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. அதன்பிறகு பிரதிவாதிகள் தரப்பு 1-ம் சாட்சியும் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு 2-ம் சாட்சிக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரர் I.A.No.4/2025 என வாதி தரப்பு 1-ம் சாட்சியை Re-Call செய்ய வேண்டுமென்று மனு தொடர்ந்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரரும் வாதி தரப்பு 1-ம் சாட்சியை நீண்ட குறுக்கு விசாரணையை செய்துவிட்டார்.

(iv) மனுதாரர் அவரது பதிலுரையில் தெரிவிக்காத சங்கதிகளை பொறுத்து குறுக்கு விசாரணை எதனையும் செய்ய இயலாது. மனுதாரர் என்ன முக்கிய தகவல்களும், என்ன தேவையான இன்றியமையாத சாட்சியங்களும் விடுபட்டுவிட்டது என்று எதுவும் தெரிவிக்கப்படவில்லை. குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்க்காக மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதற்கு சட்டத்தில் அனுமதி இல்லை.

(v) வாதி தரப்பு சாட்சியத்திற்க்காக Re-Open செய்ய வேண்டுமென்று மனுதாரர் /பிரதிவாதிகள் கோர இயலாது. மனுதாரரும், 4 முதல் 11 பிரதிவாதிகளும் வஞ்சக கூட்டு சேர்ந்து வழக்கை நடத்தி வருகிறார்கள். மனுவில் மனுதாரருக்கு எவ்வித தகுதிப்பாடும் இல்லை. ஆகவே கனம் கோர்ட்டாரவர்கள் தயவுசெய்து மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>** : -

**5.** மனுதாரர்/8 ம் பிரதிவாதி தரப்பில் சாட்சி விசாரணைக்காக இந்த வழக்கை Re-Open செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.19 17:12:55 +0530

கீழ் மனுதாரர்/8 ம் பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

6. மனுதாரர்/8 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்/வாதி எதிருரையில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, பிரமாண வாக்குமூலம், பதிலுரை, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/8 ம் பிரதிவாதி தான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், தான் மேற்படி வழக்கில் 8-ம் பிரதிவாதி ஆவேன் என்றும், மேற்படி வழக்கில் சாட்சி விசாரணைகள் முடிக்கப்பட்டு Argument-க்காக வழக்கு 23.09.2025 தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தற்போது வாதிக்கு எதிராக பல முக்கிய தகவல்களும் சாட்சியமும் கிடைத்து இருக்கிறது என்றும், அவைகளை வாதியை குறுக்கு விசாரணை செய்தால் தான் உண்மை சங்கதிகள் வெளிப்படும் என்றும், நீதி நிலைநாட்டப்படும். ஆகையால் PW-1 இந்திராணியை குறுக்கு விசாரணை செய்ய இத்துடன் Re-Call மனு தாக்கல் செய்ய உள்ளேன் என்றும், ஆகையால் கனம் கோர்ட்டார் அவர்கள் தயவுசெய்து சாட்சி விசாரணைக்காக இந்த வழக்கை Re-Open செய்து தக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகும், இல்லாவிட்டால் தனக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பும் பெருத்த கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்று மனுதாரர்/8 ம் பிரதிவாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

7. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில், வாதி இந்திராணியை குறுக்கு வசிாரணை செய்த காலத்தில் பல முக்கிய தகவல்களும் வழக்கிற்கு இன்றியமையாத சாட்சியங்களும் விடுப்பட்டுள்ளது என்பதும், அவரை குறுக்கு விசாரணை செய்தால் தான் பல அவசிமான உண்மைகள் வெளிப்பட வாய்ப்பு உள்ளது என்பதும், அதற்க்காக வேண்டி வாதி தரப்பு 1-ம் சாட்சியை Re - Call செய்ய வேண்டுமென்பதும், அவரை விசாரணை செய்ய வழக்கை Re-Open செய்ய



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.12.19 17:12:58 +0530

வேண்டுமென்பதும், தவறானதும், பொய்யானதும், உண்மைக்கு மாறானதுமாகும் என்றும், வாதி தரப்பு 1- சாட்சியின் குறுக்கு விசாரணை நீண்ட பிறகு 03.09.2024- தேதி குறுக்கு விசாரணை வாய்தாக்களுக்கு முடிக்கப்பட்டது என்றும், அதன் பிறகு வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது என்றும், அதன்பிறகு பிரதிவாதிகள் தரப்பு 1-ம் சாட்சியும் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு 2-ம் சாட்சிக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரர் I.A.No.4/2025 என வாதி தரப்பு 1-ம் சாட்சியை Re-Call செய்ய வேண்டுமென்று மனு தொடர்ந்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரரும் வாதி தரப்பு 1-ம் சாட்சியை நீண்ட குறுக்கு விசாரணையை செய்துவிட்டார் என்றும், மனுதாரர் அவரது பதிலுரையில் தெரிவிக்காத சங்கதிகளை பொறுத்து குறுக்கு விசாரணை எதனையும் செய்ய இயலாது என்றும், மனுதாரர் என்ன முக்கிய தகவல்களும், என்ன தேவையான இன்றியமையாத சாட்சியங்களும் விடுபட்டுவிட்டது என்று எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்க்காக மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதற்கு சட்டத்தில் அனுமதி இல்லை என்றும், வாதி தரப்பு சாட்சியத்திற்க்காக Re-Open செய்ய வேண்டுமென்று மனுதாரர் /பிரதிவாதிகள் கோர இயலாது என்றும், மனுதாரரும், 4 முதல் 11 பிரதிவாதிகளும் வஞ்சக கூட்டு சேர்ந்து வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றும், மனுவில் மனுதாரருக்கு எவ்வித தகுதிப்பாடும் இல்லை என்றும், ஆகவே கனம் கோர்ட்டாரவர்கள் தயவுசெய்து மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபித்துள்ளார்.

**8.** வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை வேண்டி எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு 2014 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு 2015 ம் ஆண்டு எதிர்மனுதாரர்/வாதி முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். பின்னிட்டு 04.02.2016 ம் தேதியிலும், 04.12.2021 ம்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.19 17:13:03 +0530

தேதியிலும் குறுக்கு விசாரணை பிரதிவாதிகளால் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு மனுதாரர்/8 ம் பிரதிவாதி தரப்பிலும் கடைசியாக 22.04.2025 ம் தேதியிலும் விரிவாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு இருதரப்பு சாட்சியங்களும் முடிவுற்ற பிறகு வழக்கின் வாதத்திற்காக வாய்தா போடப்பட்ட நிலையில் இந்த மனுவை மனுதாரர்/8 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்து வாதிக்கு எதிராக பல முக்கிய தகவல்களும் சாட்சியங்களும் கிடைத்திருக்கிறது என்றும், அவைகளை வாதியிடம் குறுக்கு விசாரணை செய்தால் தான் உண்மை சங்கதிகள் வெளிபடும் என்றும், அதற்காக இந்த வழக்கை Re-open செய்து வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மனுதாரர்/8 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் என்ன முக்கிய தகவல்கள் கிடைத்தது. அதற்கு என்ன ஆவணங்கள் உள்ளது என்பது குறித்து எந்த விவரங்களும் இல்லை. ஆவணங்கள் எதுவும் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை. இந்த வழக்கானது 2014 ல் தாக்கல் செய்யப்பட்டு சுமார் 10 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. ஏற்கனவே மனுதாரர்/8 ம் பிரதிவாதி தரப்பில் இதேபோன்று ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு அது IA.No.4/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அந்த மனு 28.03.2025 ம் தேதியில் அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் வா.சா.1 ஐ மனுதாரர்/8 ம் பிரதிவாதி 22.04.2025 ம் தேதி குறுக்கு விசாரணை செய்துள்ளார். மேற்படி IA.No.4/2025 ல் மனுதாரர்/8 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் தனது தரப்பு வழக்கறிஞர் வெளிநாடு சென்றுவிட்டதால் வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது. அதனால் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு அவை அனுமதிக்கப்பட்டுள்ளது. விரிவாக குறுக்கு விசாரணை செய்த பிறகு தற்போது இந்த மனுவை தாக்கல் செய்து ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்தபோது பல முக்கிய தகவல்களும் வழக்குக்கு தேவையான



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.19 17:13:06 +0530

இன்றியமையாத சாட்சியங்களும் விடுபட்டுள்ளது என்றும், அதனால் வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று மனுதாரர்/8 ம் பிரதிவாதி கோருவது சட்டப்படி ஏற்புடையதாக இல்லை. மேற்படி எதிர்மனுதாரர்/வாதி தரப்பிலும் ஏற்கனவே மனுதாரர்/8 ம் பிரதிவாதி வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ததை சுட்டிக்காட்டி இந்த மனுவை அனுமதிப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது ஏற்கத்தக்க வகையிலேயே உள்ளது. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக**, மனுதாரர்/8 ம் பிரதிவாதி தரப்பில் சாட்சி விசாரணைக்காக இந்த வழக்கை Re-Open செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.19 17:13:10 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : -

--- இல்லை ---

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.19 17:13:14 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.